சுருக்கம்

மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன் – தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம் மற்றும் சீர்மரபினர் நல வாரியம் – நல வாரியங்களில் பதிவு பெற்ற உறுப்பினர்களின் பதிவு புதுப்பித்தல் காலம் உயர்த்தப்படுகிறது – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (பிந3) துறை

அரசாணை (நிலை) எண். 44 நாள்: 03.06.2020.

திருவள்ளுவர் ஆண்டு 2051
சார்வரி வருடம் –வைகாசி 21

படிக்க ப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண். 60, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, நாள். 27.05.2008.
2. அரசாணை (நிலை) எண். 13, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, நாள் 20.04.2007.
3. அரசாணை (நிலை) எண். 29, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, நாள். 28.03.2008.
4. அரசாணை (நிலை) எண். 87, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, நாள். 08.08.2008.
5. அரசாணை (நிலை) எண். 90, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, நாள். 12.08.2008.
6. அரசாணை (நிலை) எண். 134, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் (ஐ1) துறை, நாள். 18.11.2014.
7. மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை, இயக்குநரின் கடித எண். எப்1/5999/2019, நாள். 18.02.2020.

* * * * *

ஆணை:

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியமும், இரண்டாவது மற்றும் மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணைகளில், சீர்மரபினர் நல வாரியமும் அமைக்கப்பட்டு அமைப்புச் சாரா தொழிலாளர் நல வாரியங்களில் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு பல்வேறு நலத் திட்டங்கள் வழங்குவது போன்று மேற்கண்ட வாரியங்களில் பதிவு செய்துக் கொள்ளும் உறுப்பினர்களுக்கு பல்வேறு நலத் திட்ட உதவிகள் வழங்க ஆணைகள் வெளியிடப்பட்டன.

2. மேலே நான்காவது மற்றும் ஐந்தாவதாக படிக்கப்பட்ட அரசாணைகளில், முறையே தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியத்தின் பதிவு பெற்ற உறுப்பினர் 3 ஆண்டுகள் முடிவடையும் தருவாயில் உறுப்பினர் பதிவை புதுப்பிக்க வேண்டும் என்றும் மற்றும் சீர்மரபினர் நல வாரியத்தின் பதிவு பெற்ற உறுப்பினர் 2 ஆண்டுகள் முடிவடையும் தருவாயில் பதிவை புதுப்பிக்க வேண்டுமென்றும் ஆணைகள் வெளியிடப்பட்டன.

3. மேலே ஆறாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரியம், தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் நல வாரியம் மற்றும் இதர 14 நல வாரியங்களில் பதிவு பெற்ற உறுப்பினர் பதிவை புதுப்பித்தல் காலம் இரண்டு ஆண்டிலிருந்து ஐந்து ஆண்டுகளாக உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

4. மேலே ஏழாவதாகப் படிக்கப்பட்ட மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநரின் கடிதத்தில், தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரியம், தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் நல வாரியம் மற்றும் இதர 14 நல வாரியங்களில் பதிவு பெற்ற உறுப்பினர் பதிவை புதுப்பித்தல் காலம் இரண்டு ஆண்டிலிருந்து ஐந்து ஆண்டுகளாக உயர்த்தியதை போன்று தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினர் பதிவை புதுப்பித்தல் காலம் 3 ஆண்டிலிருந்து 5 ஆண்டுகளாகவும் மற்றும் சீர்மரபினர் நல வாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினர் பதிவை புதுப்பித்தல் காலம் 2 ஆண்டிலிருந்து 5 ஆண்டுகளாகவும் உயர்த்தி ஆணைகள் வெளியிடுமாறு அரசைக் கோரியுள்ளார்.

5. மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநர் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினர் பதிவை புதுப்பித்தல் காலம் 3 ஆண்டிலிருந்து 5 ஆண்டுகளாகவும் மற்றும் சீர்மரபினர் நல வாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினர் பதிவை புதுப்பித்தல் காலம் 2 ஆண்டிலிருந்து 5 ஆண்டுகளாகவும் உயர்த்தி ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சந்தர மோகன் B,
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
தலைவர், சீர்மரபினர் நல வாரியம்,
துணைத் தலைவர், சீர்மரபினர் நல வாரியம்,
சீர்மரபினர் நல வாரிய உறுப்பினர் – செயலர் மற்றும்
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநர், சென்னை –5.
தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரிய உறுப்பினர் – செயலர்
மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநர், சென்னை –5.
பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர், சென்னை– 5.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள்.
அரசு முதன்மை செயலரின் முதன்மை தனிச் செயலர்,
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத் துறை, சென்னை– 9.
மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நல அமைச்சரின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை– 9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

3/6/2020
பிரிவு அலுவலா்.